# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
# TAMIL NADU TEACHERS EDUCATION UNIVERSITY
(with UGC 2(f) & 12 (B)Status and NAAC Accredited with "A" Grade in 1st Cycle)
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Karapakkam , Chennai - 600 097.
Phone: 044 - 28389040 Website: www.tnteu.ac.in


No.TNTEU/COE/Circular/2025/537 Date: 10.07.2025


**Prof.P.Ganesan,Ph.D**
**CONTROLLER OF EXAMINATIONS i/c**

**WEB POST**

பெறுநர்

முதல்வர்கள் / நிர்வாகிகள்
அனைத்து இணைவுப் பெற்ற கல்வியியல் கல்லூரிகள்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.

ஐயா/அம்மையீர்,

பொருள்: தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - இணைவுப் பெற்ற கல்வியியல் கல்லூரிகள் 2024-2025-ஆம் கல்வியாண்டில பி.எட். சேர்ந்த மாணாக்கர்கள் இரண்டாமாண்டில் மூன்றாம் பருவம் – கற்றல், கற்பித்தல் பயிற்சிக்கு செல்வதற்கு உரிய பள்ளிகளை தமிழக அரசின் உயர்கல்வி / பள்ளிக்கல்வித்துறை சார்பில் ஒதுக்கப்பட்டுள்ளது - பள்ளிகளின் விவரங்களை சம்பந்தப்பட்ட கல்லூரிகளுக்கு அனுப்புதல் - சார்பு.

பார்வை: பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 038390/வி2/இ1/2024, நாள்: 01.07.2025.

******

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் பி.எட். பட்டப்படிப்பிற்கான பாடத் திட்டத்தின் படி இப்பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்ற கல்வியியல் கல்லூரிகளில் பி.எட். இரண்டாமாண்டு மூன்றாம் பருவம் பயிலும் மாணவ மாணவிகள் 16-வாரம் கற்றல், கற்பித்தல் பயிற்சியினை அரசு / அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் மேற்கொள்ளுதல் வேண்டும்

அதன் அடிப்படையில் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் இணைவுப் பெற்ற கல்வியியல் கல்லூரிகளில் 2024-2025-ஆம் கல்வியாண்டில் பி.எட் சேர்ந்த இரண்டாமாண்டு மூன்றாம் பருவம் பயிலும் மாணாக்கர்கள் அரசு / அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் வருகின்ற 2025, ஆகஸ்ட் 3-ம் வாரம் முதல் கற்றல், கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

மேற்காண் பார்வையில் குறிப்பிட்டுள்ளவாறு, மாணாக்கர்கள் எந்த பள்ளியில் கற்றல், கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக அரசின் பள்ளிக்கல்வித் துறையின் வாயிலாக நிர்ணயித்த பள்ளிகளின் பட்டியலை, தங்கள் கல்லூரியின் College Login வாயிலாக அனுப்பப்படுகிறது.

எனவே, கல்லூரி முதல்வர்கள் கீழ்க்குறிப்பிட்ட வழிகாட்டு நெறிமுறைகளைப் பின் பற்றி கற்றல், கற்பித்தல் பயிற்சியினை சிறந்த முறையில் முடித்திட தங்களது சீரிய ஒத்துழைப்பினை நல்கிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

[P.T.O]

## வழிக்காட்டு நெறிமுறைகள்

1. தங்கள் கல்லூரிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பள்ளிகள் அனைத்தும் தமிழக அரசின் பள்ளிக்கல்வித் துறையால் அமைக்கப்பட்டுள்ள குழுவினால், தங்கள் கல்லூரி அமைந்துள்ள பகுதியினை Google Map–ல் கண்டறிந்து அதன் அடிப்படையில், சுமார் 15 கிலோமீட்டர் சுற்றளவில் உள்ள பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆசிரியர் தேவையின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளன.

2. ஒதுக்கப்பட்ட பள்ளிகள் பட்டியலில் எக்காரணத்தைக் கொண்டும் மாற்றம் செய்ய இயலாது.

3. மாணாக்கர்களின் வருகைப்பதிவினை, சம்பந்தப்பட்ட பள்ளி முதல்வர் வாயிலாக இணையவழியில் கண்காணிப்பதற்கு தமிழக அரசின் பள்ளிக்கல்வித் துறையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

4. கற்றல், கற்பித்தல் பயிற்சி முடிந்தவுடன் பள்ளிக்கல்வித்துறையினால் மாணாக்கர்களின் வருகைப்பதிவுக் குறித்த அறிக்கை பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்படும். அந்த அறிக்கை கல்லூரி வழியாக சமர்ப்பிக்கும் மாணாக்கர்களின் வருகைப்பதிவு அறிக்கையுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மட்டுமே பல்கலைக்கழகத் தேர்விற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

5. பள்ளி ஒதுக்கீடு குறித்த கருத்துக்கள், சந்தேகங்களைக் tnteuschoolinternship2025@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு கல்லூரியின் பெயரைக் குறிப்பிட்டு செய்தியாக டைப் செய்து, அனுப்பி தெளிவுப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

10/7/25

**CONTROLLER OF EXAMINATIONS i/c**